# Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.II Cuddalore.

| | |
|---|---|
| Case Number | : CC.No.146/2017 |
| Deposition of witness for Prosecution | : L.W.4/P.w.4 |
| Name | : சாந்தி |
| Father Name/Husband Name | : பழனிவேல் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 03.02.2026 நாளாகிய இன்று திரு. R.Buvaneshkumar, B.A, L.L.B(Hons), L.L.M., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

(எதிரி ஆஜர் இல்லை 317 குவிமுச மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதியக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் தற்போது செம்மங்குப்பத்தில் வசித்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்த ஆறுமுகம் என்பவர் எனது மாமனார் ஆவார். சுமார் 06.08.2017 அன்று எனது மாமனார் கட்சி கூட்டத்திற்க்கு செல்வதாக கூறி சென்றவர் கடலூர் போஸ்ட் ஆபிஸ் அருகே விபத்து ஏற்பட்டதாக போலீசார் தகவல் சொன்னார்கள். எனது மாமனார் இரு சக்கர வாகனத்தில் சென்றார். தகவல் அறிந்து கடலூர் அரசு மருத்துவமனையில் சிகி்சைசை பெற்று வந்து எனது மாமனாரை பார்த்தேன். அவர் மயக்க நிலையில் இருந்தார். பின்னர் மேல் சிகிச்சைக்காக ஜிப்மர் மருத்துவமனைக்கு அழைத்து செனறோம். அங்கு அவர் இறந்து விட்டார். இறப்பு சம்மந்தமாக எனது நாத்தனார் பழனியம்மாள் என்பவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். விபத்து ஏற்படுத்திய நபரை நான் பார்க்கவில்லை. விபத்து பற்றி வேறு விபரம் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>சாட்சியை அரசுதரப்பில் பகுதி பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதின் பேரில் அனுமதியளித்து அ.த.கு.வி,</u>**

முதல் விசாரணையில் சொன்னா தேதியில் எனது மாமனார் நடந்து சென்ற போது அவருக்கு பின்னாள் வந்த இரு சக்கர வாகனம் வேகமாக வந்து என் மாமனார் மீது மோதி அவர் கீழே விழுந்து அவருக்கு பின் தலையில் பலமாக அடிபட்டு மூக்கில் இரத்தம் வந்து சிகிச்சைக்கு அழைத்து சென்றதாக தகவல் பெற்றேன் என்று சொன்னால் சரிதான். விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் மருத்துவமனைக்கு செல்லும் போது என்ன நேரம் என்று சொன்னால் மதியம் 02.00 மணி. நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்கள் நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரிதான்.